<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண்.50/2020</u>

இந்நீதிமன்றத்து உதவியாளர் திரு.சு. குணசேகரன் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025**–ஆம் ஆண்டு **மார்ச்** மாதம் 26–ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி** – 26.03.2025

**பெயர்** – **முகமது பெகாமி**

**த/பெ** – **கே.எம்.பஷீர்**

**சாட்சி** – **DW1**

**விசாரணை தொடங்கும் நேரம் –** 1.05 **a.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

5. வழக்கு சொத்தினை கடைசியாக எப்பொழுது பார்வையிட்டேன் என்றால் சென்றவாரம் சென்று பார்த்தேன். வழக்கு சொத்தின் நான்கு எல்லை விவரம் என்ன என்றால் கிழக்கு பக்கம் சிவபூஷனம் மற்றும் மகேஷ் வீடுகள் உள்ளன மேற்கு பக்கம் குளம் உள்ளது வடக்கு பக்கம் ஷெட் ஒன்று உள்ளது தெற்கு பக்கம் சாலை உள்ளது. வழக்கு சொத்தில் தண்ணீர் தொட்டி கட்டுவதற்கு எந்த இடத்தில் இடம் ஒதுக்கப்பட்டது என்றால் கிழக்கு பக்கம் ஒதுக்கப்பட்டது. மேற்படி தண்ணீர் தொட்டிக்கு அருகே வடக்கு பக்கமாக பிள்ளையார் கோயில் உள்ளது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி ஒன்பதில் வாதிகள் கட்ட பஞ்சாயத்து செய்ததாக நான் கூறியுள்ள நிலையில் யாரை வைத்து கட்ட பஞ்சாயத்து செய்துள்ளீர்கள் என்றால் கண்ணன் என்பரை மத்தியஸ்தராக வைத்து கட்ட பஞ்சயாத்து செய்யப்பட்டது அதற்கு நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. கண்ணன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் இல்லை எனக்கு அவர் அதற்கு முன்பு அறிமுகம் இல்லை தற்போது பார்த்தால் அடையாளம் காட்ட இயலுமா என்றால் இயலும். என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் பத்தி 8 ல் வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையின் போது அவர்

ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் எங்கள் தரப்பு ஆவணமாக பி.வா.சா.ஆ.1 முதல் 3 குறியீடு செய்யப்பட்டதாக நான் தெரிவித்துள்ளேன் என்றும் மேற்படி ஆவணங்கள் என்னென்ன ஆவணங்கள் என்றால் 1924 தேதியிட்ட அசல் அடமான கடன் பத்திரம், 1928 ல் ஏற்படுத்திக்கொண்ட கிரைய லெட்டர், இறப்பு சான்றிதழ் மற்றும் உறவு முறை சான்றிதழ் ஆகியவை குறியீடு செய்யப்பட்டது.

6. வாதிகள் பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3 முதல் 8 வரை குறிப்பிட்டுள்ளவற்றை நான் மறுப்பதாக கூறும் நிலையில் எதை எதை மறுக்கிறேன் என்றால் நாங்கள் மோசடியாக நிலத்தை அபகரித்ததாக வாதிகள் கூறுவதை நாங்கள் மறுக்கிறோம். வாதிகள் ஆள்மாறட்டம் செய்து மோசடியாக 05.11.2007 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை உருவாக்கியதாக நான் கூறும் நிலையில் யார் யாராக ஆள்மாறட்டம் செய்தது என்றால் கிருஷ்ணவேணி அம்மாள் என்றவரை உருவாக்கி அவள் மகள் சகுந்தலா என்பரையும் உருவாக்கி போலி பத்திரம் தயார் செய்துள்ளனர். வழக்கு சொத்தை இது நாள் வரையில் நான் நேடியாக சென்று பார்க்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் நான்கு எல்லை விவரம் எனக்கு தெரியாத நிலையில் வழக்கு சொத்து பற்றிய நான் நீதிமன்றத்தில் கொடுத்த சாட்சியம் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வாதிகள் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 1.20 a.m.**